முருகப்பெருமான் துணை

**மகான் கோட்புலி நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

24.02.2023, வெள்ளிக்கிழமை

1. ஆறுமுக ஞானியே அரங்கா
அன்னதான வள்ளலே தேசிகா
ஆறுதல் தந்து உலகமக்களை
ஆறுமுகனார் ஞானப் படைகளாக
2. படைகளாக மாற்றவந்த தவசியே
பாடிடுவேன் அரங்கன் பெருமை கூறி
தடையற அனுகூல ஆசிதனை
தக்கதொரு சுபகிருது சால்திங்கள்
3. திங்களிலே வியதிகதி புகர்வாரம்
(சுபகிருது வருடம் மாசி மாதம் 12 ம் நாள், 24.02.2023 வெள்ளிக்கிழமை)
தேசிகனுக்கு கோட்புலி நாயனாரும்
இங்கனமே உலகநலம்பெற உரைப்பேன்
இனிதே அரங்கன் காட்டும் வழி
4. வழிகளும் தருமஞான வழியாக
வையகம் காக்கும் சக்தியாய் இருக்க
தெளிவுதிடம் வேண்டி வருமுலகில்
தேசிகனை தேடி உலகமக்கள்வர
5. வருகவே உலகம் எங்கிலும்
வள்ளல் தன்மையாக மாறி
முருகப்பெருமான் அருளாசி
முழுமை கண்டமக்கள் படையாக
6. ஆகவே ஆற்றல் பெருகி
அனைத்துத் துறைகள் தனிலும்
வகையான ஞானவான்கள் சேவை
வளர்ந்து நியதியான செயல்பாடாக
7. ஆகவே பாதுகாப்புப் பெருகி
அகிலம் மாற்றம் காண்கும்
வகைபட ஞானத்தலைமையை
வல்லமைபட உருவாக்கும் வண்ணம்
8. வண்ணமுடன் சக்திகள் பெருகி
வையகமும் வேலவன் ஆசிபெற்ற
எண்ணம் தூய்மை கொண்ட
எளியவர்களே ஆளும் வண்ணம்
9. வண்ணமுடன் ஞான ஆட்சி
வையகம் கண்டுயர நேரும்
அண்ணல் அரங்க ஞானியே
அற்புதத்தை நடத்தும் மகானாகும்

10. ஆகவே அவதாரம் அறிந்துணர்ந்து
அரங்கன் நிழல் அகலாத்தொடர
செகமே ஞானவான்கள் நிரம்பிய
சித்தர் ஞான லோகம் ஆகி
11. ஆகியே மாற்றம் கண்டடையும்
ஆறுமுகனார் வெளிப்பாடு கண்டு
அகிலம் சர்வபாதுகாப்பும் பெறும்
அறிவித்த அனுகூல ஆசி முற்றே

—சுபம்—